

# மதத்தில் புரட்சி செய்த மகான்கள்
# என்ற
# இந்துமதம் கடந்து வந்த பாதை










**Er T Kuppan**

samugasinthanai.in

## Disclaimer

தனிமனித மற்றும் எந்தமதத்தினரின் நம்பிக்கையை புண்படுத்தாமல் இக்கட்டுரை தொகுப்பு எழுதப்பட்டுள்ளது. அப்படி சிலகருத்துக்கள் அவர்கள் மனதை புண்படுத்தியிருந்தால் அவர்களின் மன்னிப்புக்கு நான் ஆளாகிறேன்.

மொழிப்பெயர்ப்பின் காரணமாக சிலகருத்துக்கள் மகான்கள் கூறிய அருளுரையின் நேரடி விளக்கமாக இருக்காது. ஆனால் அவர்களின் கருத்துடன் ஒத்துப்போகும் என்பது இக்கட்டுரையாசிரியரின் கருத்து.

**Er T Kuppan**

**Hariharappakkam,**
**Vembakkam Tk.,**
**Thiruvannamalai Dt./**
**Market St, Perambur,**
**Chennai.**

# இந்துமதம் கடந்துவந்தபாதை

நம் பாரத நாட்டின் பூர்வீக மதமான "இந்து மதம்" உலகின் மிகப்பழமையான மதங்களில் ஒன்றாகும். இந்தியாவில் இந்து மதம் அல்லாமல், புத்தம், சமணம் மற்றும் சீக்கிய மதங்கள் தோன்றின. கிறிஸ்துவம் மற்றும் இஸ்லாம் போன்ற மதங்கள் பரப்பப்பட்டன. சில ஆயிரம் வருடங்களாக இந்த நாட்டின் மக்கள் பின்பற்றிவரும் இந்துமதத்திற்கு இடையில் சிலகாலம் வேற்று மதத்தினர்களால் சிறிது தொய்வு ஏற்பட்டது.

இந்தியா, பல மகான்கள் மற்றும் ஞானிகள் தொன்று தொட்டு பிறந்து வளர்ந்து அருளறைகள் வழங்கிய ஞானபூமி யாகும். பல மகான்கள் அன்றைய சமூகசூழலில் மக்கள் படும் துன்பங்களை கண்டு மனம் வருந்தி சில தீர்வுகளை வெளிப்படுத்தினர். சிலர் அந்த மதங்களை பின்பற்றுபவர்களின் முதன்மை கடவுளாயினர்கள். அவர்களில் கீழ்கண்ட 11 மகான்கள் சமுதாயத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள் இங்கே சிறிது கூறப்பட்டுள்ளது:

1. புத்தர் (கடவுள்)
2. மகாவீரர் (கடவுள்)
3. மகான்ஸ்ரீஆதிசங்கரர்
4. மகான்ஸ்ரீஇராமானுஜர்
5. மகான் பசவா / பசவேஷ்வர
6. சுவாமி குருநானக்ஜி (கடவுள்)
7. மகான்/சுவாமி இராமலிங்க அடிகளார்
8. மகான் ஸ்ரீநாராயண குரு
9. மகான் பாபா சாகேப் பீம்ராவ் ராம்ஜி அம்பேத்கர்
10. மகான் தந்தை பெரியார் ஈ. வெ. ராமசாமி
11. மகான் மேல்மருவத்தூர் அருள்திரு பங்காருஅடிகளார்.

**இங்கு முன்னுதாரணம் காட்டப்படும் மகான்கள்பற்றிய கருத்துக்கள் பக்தி மார்க்கத்திற்கு அப்பாற்பட்டது**.

**இந்தியாவில் மதங்களின் தோற்றம்**

இந்தியாவில் சுமார் கி .மூ 3000 ஆண்டில் சிந்து சமவெளி மக்கள் சிவனைப் போன்ற ஒரு உருவத்தை வணங்கியதாக கருதப்படுகிறது .

கி.மு.2000 - 1500ல் வேதகாலத்தில் சூர்ய குடும்பத்தை சார்ந்த தெய்வங்களும், இயற்கையும் வணங்கப்பட்டன. வேதகாலத்தில் (வேதங்கள் - ரிக் , யஜுர்,சாம,மற்றும் அதர்வண) குறிப்பாக ரிக் வேதத்தில் சூர்யன் மற்றும் சூர்ய குடும்ப கோள்கள் வணங்கப்பட்டன. அவை: 1. சூரியபகவான், 2. வாயுபகவான், 3. வருணபகவான், 4. அக்னீபகவான், 5. சனிபகவான், 6. பூமாதேவி மற்றும் பிற. பெருண்பான்மை யானவை நீர், நிலம், நெருப்பு, காற்று மற்றும் ஆகாயம் (மழை) சார்ந்தவை.

**பௌத்தமும் - சமணமும் (ஜைனம்)**

கி.மு. 6-ம் நூற்றாண்டில் இந்தியாவில் புத்த மதமும், சமண மதமும் தோன்றியது. (பௌத்தமும் – சமணமும் சமகாலத்தவை). சமணமும், புத்தமதமும் இந்திய முழுவதும் பரவியது. சமணம் குறிப்பாக வடமேற்கு மற்றும் தென்னிந்தியாவில் விரைந்து பரவியது-தென்னிந்தியாவில் குறிப்பாக கர்நாடகம் மற்றும் தமிழகமெங்கும் பரவியது. பல்லாயிரம் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது - தழுவப்பட்டது. குறிப்பாக பல்லவமன்னர்கள் காலத்தில் தமிழகத்தில் வடக்கு மாவட்டங்களில் பலர் சமணத்தை தழுவினர். திருவள்ளுவர் சமணரா! என்று விவாதிக்கும் அளவிற்கு சமண மதம் தமிழகம் முழுவதும் பரவியது. இன்றும் சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை மாவட்டங்களில் பல்லாயிரம் சமணர்கள் வாழ்கின்றனர்.புத்தமதம் தெற்கு, கிழக்கு, வடக்கிழக்கு, வடக்கு, மற்றும் வடமேற்கு ஆசியா வரை பரவியது.

**தமிழகத்தில் சமணம் மற்றும் பௌத்தம்**

பண்டைய தமிழகத்தில் பௌத்தமும், சமணமும் தழைத்தோங்கியது. பல சமணமதம் சார்ந்த கோவில்கள் (பூழல், திருப்பருத்திகுன்றம், கரந்தை, வெண்பாக்கம் மற்றும் பலஊர்கள்), குகைகள் அமைக்கப்பட்டன. மற்றும் ஓவியங்கள் (சித்தன்ன வாசல்) தோகைமலைப் போன்ற கற்குன்றுகள் தோன்றின. சமணம், பல்லவ மற்றும் பாண்டிய மன்னர்களின் ஆதரவு பெறப்பட்ட சமயமாகும்.

சமணமத அறிஞர்கள் பலர் பலப்பல இலக்கியங்கள், நீதிநூல்கள், கலைக்கூடங்கள், கல்வெட்டுகள், குகைகள், ஓவியங்கள் மற்றும் குகைக்கோயில்கள் உருவாக காரணமாக இருந்தனர்.

காஞ்சிபுரம் மற்றும் நாகப்பட்டினத்தில் புத்தமதம் தழைத் தோங்கியது. தமிழில் மிகவும் குறிப்பிடத்தக்க பௌத்த இலக்கியங்களில் "இரட்டை காப்பியங்கள்" (சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலை ) மேன்மையுடையனவாகும். சீனபௌத்த துறவிகள் பல்லவர்கள் காலத்தில் காஞ்சிக்கு வந்ததாக வரலாறு.

மணமதம் ஏற்படுத்திய தாக்கம் போல் கலை, இலக்கியம் மற்றும் மக்கள் பின்பற்றுதல் போன்றவற்றில் பௌத்தம் எனோ தமிழகத்தில் அதிக பதிவுகளை ஏற்படுத்தவில்லை என்பது பொது கருத்து.

**சமண தமிழிலக்கியங்கள்**

சமணர்கள் தமிழில் பல, பல நூல்கள் எழுதி பெரும் பணியாற்றியுள்ளனர். குறிப்பாக சீவகசிந்தாமணி, நாலடியார், சூளாமணி, பழமொழி நானுறு, ஏலாதி, நன்நூல் , நேமிநாதம் (நேமிநாத்) மற்றும் பல. தமிழிலக்கியங்களில் பண்டைய தமிழகத்தில் சமண தமிழறிஞர்களால் எழுதப்பட்ட நூல்களை விடுத்து பார்த்தால் குறிப்பிடத்தக்க பிற நூல்கள் ஏதும் மிஞ்சாது என்பது உண்மை **முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர்** அவர்களின் கருத்து.

**தமிழக அரசிற்கு ஒரு வேண்டுகோள்**

தமிழ் வளர்த்த சமணம் மற்றும் பௌத்த மதங்களை கவுரவிக்க சென்னை கடற்கரையில், புத்தர் மற்றும் மகாவீரர் இருவருக்கும் சிலை அமைக்க வேண்டும்.

**தமிழகத்தில் கிறிஸ்துவ மதம்**

கி.பி முதல் நூற்றாண்டில், இயேசு கிறிஸ்துவின் சீடர்களில் ஒருவரான புனிததோமையர், கேரளம் மற்றும் சென்னையில் குடியேறி தமது மதத்தை பரப்பினார்கள். தமிழனின் உயரிய பண்பான 'யாதும் ஊரே யாவரும் கேளீர் " என்பதற்கிணங்க புனிததோமையரை(St.Thomas)ஏற்றுக்கொண்டு அவர் பெயரில் புனித தோமா (சாந்தோம்) என்று கடற்கரையோர நகர் பெயரையும், பின்னாளில் புனித "தாமஸ்மலை" என்ற ஊர் மற்றும் ரயில்நிலைய பெயரும் வழங்கி (ஏனோ பெயர் மாற்றபடவில்லை) கிறிஸ்துவ மதத்தினரையும், கிறிஸ்தவமதத்தையும் கௌரவித்தனர்.

**தமிழக நாயன்மார்களும், ஆழ்வார்களும் இந்துமதத்திற்கு அளித்த பரிசு**

கலப்பிரர்களின் காலத்திற்கு பிறகு தமிழ்நாட்டில் பக்தி இயக்கம் துவங்கி விட்டது. அதன் விளைவாக தேவாரம், திருவாசகம் நாலாயிர திவ்வியப் பிரபந்தம் போன்ற இறைவணக்க பாடல்களும், பல பக்திநூல்களும் தோன்றி இந்து மதத்தின் புகழை பரப்பின. குறிப்பாக நால்வர் - திருநாவுக்கரசர் (சமணத்திலிருந்து இந்து மதத்திற்கு திரும்ப தமது தமக்கை திலகவதியார் மூலம் கொண்டு வரப்பட்டார்என்பது கருத்து ), சுந்தரர், மாணிக்கவாசகர் மற்றும் திருஞானசம்பந்தர் மேலும் 12 ஆழ்வார்கள் (1.பொய்கையாழ்வார், 2.பூதத்தாழ்வார், 3. பேயாழ்வார், 4.திருமழிசையாழ்வார், 5. நம்மாழ்வார், 6. மதுரகவி ஆழ்வார், 7. குலசேகர ஆழ்வார், 8. பெரியாழ்வார், 9. ஆண்டாள் 10. தொண்டரடிப்பொடியாழ்வார், 11. திருப்பாணாழ்வார் மற்றும் 12.

திருமங்கையாழ்வார்) மூலம் பக்தி இயக்கம் தொடங்கி விட்டது. அதாவது ஆதி சங்கரர் தோற்றத்திற்கு முன்பே தமிழ்நாட்டில் பக்தி இயக்கம் தொடங்கி விட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் கி.பி. 5 முதல் 9 நூற்றாண்டு கால அளவில் வாழ்ந்தவர்கள். இவர்களால் பலப்பல கோயில்கள் பாடல்பெற்ற தளங்கலங்களாயின. பல்லவ, சோழ, பாண்டிய, விஜயநகர, சேர மற்றும் பல குறுநிலமன்னர்கள் தமிழகத்தில் சில ஆயிரம் கோயில்களை கட்டினர். புதுப்பித்தனர் . கோயில்களை பராமரிக்க நிலத்தை தானமாக வழங்கினர்.

கி.பி. 6 முதல் 12-ம் நூற்றாண்டு வரை சைவமும், வைணவமும் தமிழகத்தில் தழைத்தோங்கியதால் சமணமும் பௌத்தமும் தமிழ்நாட்டில் சிறிது சிறிதாக குறைந்தது.

**இந்தியாவில் பக்தி இயக்கம்**

தமிழ்நாட்டில் பல்லவர்காலத்தில் நாயன்மார்கள் மற்றும் ஆழ்வார்களால் தொடங்கப்பட்டது பக்தி இயக்கம். பின்னாளில் கர்நாடகா, மராட்டியம், ராஜஸ்தான், மேற்குவங்கம், ஆந்திரா, வடஇந்தியா மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் பக்தி இயக்கம் வளர்ந்தன. வடஇந்தியாவின் பலபகுதிகளில் பல மகான்கள் தோன்றி வைணவத்தை பரப்பினர். குறிப்பாக பக்தை மீரா, துளசிதாசர், சைதன்ய மஹாபிரபு, புரந்தரதாசர் போன்றோர் இடம் பெறுகின்றனர். அஸ்ஸாமில் ஸ்ரீநாராயணதேவ குறிப்பிடத்தக்கவர்.

ஆந்திராவில் ஸ்ரீஅன்னமாச்சியர் வைணவ கடவுள் திருவேங்கமுடையன் பெருமைகளை பரப்பினர். (இறைவனே அன்னமாச்சியாரின் திருமணத்தை நடத்தி வைக்கிறார்; அவரின் திருமண ஊர்வலத்ததின் போது பல்லக்கு சுமக்கிறார் மற்றும் முடிவில் அவரை தடுத்தாட்கொண்டு அவருக்கு மோட்சம் அளித்தாக கூறப்படுகிறது). மேலும் நவீனகாலத்தில் ஸ்ரீசாய்பாபா, ஸ்ரீராகவேந்திரர், ஸ்ரீசத்தியசாய் போன்றவர்கள் தோன்றினர்– மக்கள் குறைதீர்க்கும் மகான்களாக விளங்கினர்.

கி.பி. 1200 க்குப் பிறகு இந்துமதம் அல்லாமல் பலமகான்கள் இஸ்லாமிய மதத்தில் தோன்றி மக்களுக்கு பலப்பல சமுதாய தொண்டுகள் ஆற்றினர். இந்து - முஸ்லீம் ஒற்றுமையை வளர்த்தனர் மற்றும் மக்கள் பணியாற்றினர். கி .பி 16 ம் நூற்றாண்டில் வட மேற்கு இந்தியாவில் சுவாமி குருநானக்ஜி அவர்களால் புதியமதம் -
"சிக்கிய மதம்" உருவாகியது. சீக்கியர்கள் அன்பு, கருணை மற்றும் வீரத்தின் விளைவிடமாக உள்ளனர்.

ஆங்கிலேயர்கள் ஆட்சிகாலத்தில் பலப்பல கிறிஸ்துவ குருமார்கள் கிறிஸ்துவமத இறைபணியுடன்/ மத மாற்றத்துடன், சமுதாய பணியான கல்விப் பணியினை செய்துவந்தனர். அதனால் வட கிழக்கு மற்றும் வடமாநிலங்களில் ( குறிப்பாக சீர்மரபினர்) கல்வியில் சிறந்து விளங்குகின்றனர். தமிழகத்தில் திருநெல்வேலி மாவட்டமும் உதாரணமாகும். (ஆனால் இவர்கள் சீர் மரபினர்கள் அல்ல.)

**இந்து மதத்தின் மீது ஞானிகள் மற்றும் மகான்களின் தாக்கம்**

மேலே கூறிய 11 மகான்களை பற்றியும் அவர்களின் சமூகசிந்தனைகளையும் கீழே சுருக்கமாக கூறப்பட்டுள்ளது. பல மகான்களின் கொள்கைகள் திருக்குறள் மற்றும் திருமந்திரம் (திருமூலரின்) கருத்துகளுடன் ஒத்து போகின்றன. உயிர் கொலை செய்யாமை, கள்ளுண்லாமை, மற்றும் பலப்பல கருத்துக்கள், குறிப்பாக ராமலிங்க அடிகளார், ஸ்ரீநாராயணகுரு மற்றும் பலரின் கருத்துகளுடன் ஒத்துப்போகின்றன. ஞானிகள் பலர் பின் நட்களில் கடவுளாயினர்- உதாரணம் புத்தரும், மகாவீரரும் (மகான்களின் கருத்துக்களை பின் பற்றியவர்கள் ஒருமதத்தை சார்ந்தவர்களாக பின்னாளில் உருவாகினார்கள்- உதாரணம்- பௌத்தமும் - சமணமும்).

**புதிய மதங்களை உருவாக்கியவர்கள்**

1. புத்தர் - புத்தமதம்
2. மகாவீரர் - சமணம்

3. பசவேஷ்வர - வீரசைவம்

4. குருநானக் ஜீ - சீக்கியம்

5. Dr. B.R அம்பேத்கர் - புதிய புத்த மதம்

புதிய வழிபாட்டுமுறைகளை ஏற்படுத்தியவர்: அருள் திரு வள்ளலார் (ஒளியை வணங்குதல் ).

ஒருவர், தான் சார்ந்த சமூகத்தினரை இழிவுபடுத்தும் இந்து மதத்திலிருந்து மீள வேறு ஒருமதத்தை தழுவ செய்தார்.

ஒருவர் மனித வாழ்க்கையில் ஆசையே துன்பத்திற்கு காரணமென்று கூறினார்.

இருவர் உயிர் கொலை செய்யகூடாது என்று கூறினார்கள் .

ஒருவர் இந்து மதத்தை பிறமதத்திலிருந்து காப்பாற்றி இந்து மதம் தழைக்க செய்தார் .

ஒருவர் கடவுளை மற; மனிதனை நினையென்று கூறினார்.

ஒருவர் தான் சார்ந்த இனம், மற்ற ஆதிக்க சாதியினர்களால் இந்து கோவில்களில் நுழைய விடா**த** போது, தானே கோவில் கட்டி தனது இனத்தவர் வழிபட வழிவகுத்தார்.

ஒருவர் வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன் என்று கூறி சமரச சன்மார்க்க நெறியை பரவச்செய்தார்.

சிலரின் புரட்சிகரமான கருத்தினால் மக்கள் கல்வியறிவு பெற்றனர். அவர்கள் சார்ந்த மாநிலமே சமுதாயவளர்ச்சியில் மிகவும் முன்னேறிய மாநிலங்களாக மாறின. உதாரணம்: பெரியார் அவர்கள் மற்றும் சுவாமி நாராயணகுரு அவர்கள். இந்தியாவின் சில வட மாநிலத்தினர் எங்கள் மாநிலத்தில் மகான்கள் பெரியார் மற்றும் நாராயணகுரு போன்றவர்கள் தோன்றவில்லேயே என்று கருதுகின்றனர்.

# 1. புத்தர்



ஆதாரம்: கி.மு. 5ம் நூற்றாண்டின் புத்தர்சிலை - அருங்காட்சியகம், சாரநாத், உத்தரபிரதேசம்.

https://commons.wikimedia.org/wiki/File:Buddha_in_Sarnath_Museum_(Dhammajak_Mutra).jpg
https://en.wikipedia.org/wiki/Dharmachakra_Pravartana_Buddha_at_Sarnath#/media/File:Buddha_in_Sarnath_Museum_(Dhammajak_Mutra).jpg
A statue of the Buddha from Sarnath, Uttar Pradesh, India, circa 475 CE. The Buddha is depicted teaching in the lotus position, while making the Dharmacakra mudrā.

இயற்பெயர் - சித்தார்த்த கௌதமர்

மருவிய பெயர் - புத்தர்

பிறந்த ஆண்டு - கி.மு. 563

பிறந்த இடம் - லும்பினி ( நேபாளம்)

முக்தி - குஷிநகர், உத்தர பிரதேசம்

புத்தரால் தோன்றியது புத்தமதம்.

"ஆசையே" துன்பத்திற்காக அடிப்படை காரணம் என்னும் தத்துவத்தை உலகிற்கு போதித்தவர்.

**புத்தரின் போதனைகள்**

புத்தர்பெருமானின் பெரும்பாலான போதனைகள் நான்கு பேருண்மைகளை சார்ந்தவை.அவைமுறையே:

1. துன்பம், நோய், முதுமை, இறப்பு மற்றும் பசி மனிதர்களால் தவிர்க்க இயலாத துன்பங்களாகும்.

2. ஆசையே துன்பத்திற்கான காரணம்.

3. ஆசையை விடுவதுவே துன்பத்தை நீக்கும் முறையாகும் - துன்பம் நீக்கல்.

4. எட்டு நெறிகள்/ எண் வகை வழிகள் துன்பத்தைப் போக்க உதவும் வழிமுறைகள் ஆகும். எண் வகை வழிமுறைகளை கடைபிடித்தால் ஆசைகளை ஒழித்து விடலாம்.

Box -1

The Basic Teachings of Buddha which are core to Buddhism:
- The Three Universal Truths;
- The Four Noble Truths; and
- The Noble Eightfold Path.

http://online.sfsu.edu/rone/Buddhism/footsteps.htm

The Three Universal Truths:
1. Nothing is permanent in the universe,
2. Everything Changes,
3. The Law of Cause and Effect.

**புனித எண் வகை மார்க்கங்கள்**

எண்வகை மார்க்கங்களில் எட்டு நடைமுறைகள் உள்ளன. அவைமுறையே:

1. நல்லஎண்ணம், 2. நல்ல நம்பிக்கை, 3. நல்ல பேச்சு, 4. நல்ல செயல், 5. நல்ல வாழ்க்கை, 6. நல்ல முயற்சி, 7. நல்ல சிந்தனை, மற்றும் 8. நல்ல நோக்கம்.

**மூன்று மணிகள்(The Three Jewels)**

மும்மணிகள் அல்லது மூன்று இரத்தினங்கள் என்பது பௌத்தர்கள் நம்பும் புத்தமத கோட்பாடுகள். அவை முறையே புத்தம், தர்மம் மற்றும் சங்கம். இவற்றின் பொருள்

1. புத்தர் - வழிகாட்டி
2. தம்மா/தர்மம் – நன்னடத்தை பாதை
3. சங்கம்  - வழித்துணையாக வருபவர்கள்.

Box 2:The Three Jewels

| |
|---|
| 1. The Buddha is the guide.<br>2. The Dharma is the path.<br>3. The Sangha are the teachers or companions along their way. |

**Box 3: Budha's pilgrimage circuit**

| |
|---|
| World communities and devotees/followers of Buddha! You are welcome to India to worship 3 holy places of Buddhism:<br>1. Bodh Gaya - the Enlightenment place<br>2. Saranath - the First Dhamma (தர்மச்சக்கரப்பரிவர்தன) teaching place<br>3. Kushinagra - the Nirvana place.<br>Lumbini, the birth place is in Nepal (It is located about 20 km from India's UP border). |

References


https://ta.wikipedia.org/wiki/பௌத்தம்
https://ta.wikipedia.org/wiki/கௌதம_புத்தர்
https://www.itstamil.com/gautama-buddha.html
http://online.sfsu.edu/rone/Buddhism/footsteps.htm
https://ta.wikipedia.org/wiki/மும்மணிகள் (பௌத்தம்)


................O.................

# 2. மகாவீரர்




I . மகாவீரர்                II மகாவீரர் - **சமணர்மலை** மதுரை

1. https://en.wikipedia.org/wiki/Mahavira#/media/File:Mahavir.jpg
2. Vardhaman (Mahavira) sculpture at Keezhakuyilkudi, Madurai, Tamilnadu, India This is the crop of original I mage: Mahavira Keezhakuyilkudi
3. https://ta.wikipedia.org/wiki/:Vardhaman_Keezhakuyilkudi.jpg

பெயர் : வர்த்தமானர்

வரலாற்று நாள் : கி.மு .599 -527

பிறப்பு : கி.மு .599, இடம் : குண்டா , வைசாலி , பீகார்மாநிலம்

முக்தி : கி.மு .527

மகாவீரரால் தோன்றிய மதம் : சமணம் (ஜைனமதம்).

சமண சமயத்தை உலகிற்கு அறிமுகப்படுத்திய மாபெரும் ஜைன மதத்துறவி மகாவீரர் ஆவார். தன்னுடைய 32 வயதிலேயே மனித வாழ்க்கையின் உண்மையை உலகத்திற்கு எடுத்துரைத்தவர்.

மகாவீரர் சமண மதத்தின் வழிகாட்டியாக மட்டுமே இல்லாமல், அகிம்சையை உலகுக்கு போதித்த மகானாகிறார்.

சமண மதகுருமார்கள் வரிசையில் மகாவீரர் இருபத்தி நான்காவது தீர்தங்கரராகப் (*Tīrthankar*) போற்றப்பட்டார். இவரே சமணசமயத்தில் தோன்றிய கடைசி தீர்த்தங்கர் ஆவார்.

**மகாவீரரின்போதனைகள்**

சிறு உயிர்களுக்கும் ஆன்மா உண்டு: மனிதனின் ஆன்மாவும் சிறுஉயிர்களின் ஆன்மாவும் சமமானதே.

"ஒவ்வொரு' உயிரனத்திற்கும் ஓர்ஆத்மா உண்டென்றும், அது, தனது நல்லது அல்லது கெடுதல் செயல்களின் விளைவாக "கர்மா" என்ற வினைப் பயன்களை அடைய நேரிடும் எனபோதித்தார். இதிலிருந்து விடுபட, மூன்று ரத்தினங்கள் என அழைக்கப்படும் 'நன்னம்பிகை, நல்லறிவு, நற்செயல்' போன்றவற்றை கடைப்பிடித்தால் சித்திநிலையை அடையலாம் எனவும் போதித்தார் .

எந்த உயிரனத்திற்கும் தீங்கு விளைவிக்காமல் இருத்தல், உண்மையை மட்டும் பேசுதல், திருடாமை, பாலுணர்வு இன்பத்தில் ஈடுபாடு இல்லாமை, பணம் பொருள் சொத்துக்கள் மீது ஆசைகொள்ளாமல் இருத்தல், என ஐந்து பண்புகளும் ஜைனமதத்தின் உறுதி மொழிகளாக விளங்குகின்றன.

**மகாவீரரின் மெய்யியல்**

மகாவீரரின் மெய்யியலில் எட்டுகொள்கைகள் உள்ளன – மூன்று கருத்து மயமானவை. அவரது கருத்தியலில் மூன்றுகொள்கைகள் உள்ளன: அநேகந்தவாடா(Anekantavada ), சியத்தவாடா (Syādvāda) மற்றும் கர்மா.

**ஐந்து உறுதி மொழிகள்**

நன்னடத்தைக்கு துணைநிற்க ஜைனமாதத்தில் ஐந்து உறுதி மொழிகள் எடுக்கவேண்டும்:

1. வன்முறை தவிர்த்தல் (அகிம்சை) – பிற உயிர்களுக்கு தீங்கு இழைக்கக்கூடாது

2. வாய்மை (சத்தியம்) : உண்மையை மட்டுமே பேசுதல்;

3. திருடாமை (அஸ்தேயம்)

4. பாலுறவு தவிர்த்தல் ( பிரம்மச்சரியம்)

5. பற்றற்று இருத்தல் (அபாரிகிருகம்) - பொன், பொருள் மற்றும் இடம் இவற்றிலிருந்து பற்றற்று இருத்தல்.

இந்த 5 உபதேசங்களை பஞ்சரத்னங்களாக நினைத்து போற்றி கடைபிடிக்க வேண்டும். என்று கூறினார்.

'கவனமுடன் செயல் படுங்கள்; நல்ல விஷயங்களில் மட்டும் மனத்தைத் திருப்புங்கள்' என்று அறிவுறுத்தினார்.


உலகில் அகிம்சை, புலால் உண்ணாமை, உயிர்க்கொலை செய்யாமை என்றும் காய்கறி உணவு மற்றும் உணவில் சேர்க்கும் பொருள்களில் சில கட்டுப்பாடுகள் விதித்து அன்றாடம் செயலில் கடைபிடிக்கும் மதம் ஜைனமதம்.

References

https://ta.wikipedia.org/wiki/மகாவீரர்
https://www.itstamil.com/mahavira.html
https://www.vikatan.com/spiritual/temples/85766-mahavira-has-won-the-peoples-hearts
https://m.dailyhunt.in/news/india/tamil/shakthi+online-epaper-sakonle/makaveerarin+makathana+bothanaikal-newsid-84627992
https://ta.wikipedia.org/wiki/மகாவீரர்_ஜெயந்தி
https://ta.wikipedia.org/wiki/:Vardhaman_Keezhakuyilkudi.jpg

--o--

# 3.மகான் ஸ்ரீஆதிசங்கரர்



https://en.wikipedia.org/wiki/Adi_Shankara#/media/File:Raja_Ravi_Varma_-_Sankaracharya.jpg

மகான் ஆதிசங்கரர் ஏழாம் நூற்றாண்டில், கேரளத்திலுள்ள " காலடி " எனப்படும் ஊரில் தோன்றிய மெய்ஞான வல்லுநர்.

நம் பாரதநாட்டில் பூர்விக மதமான "இந்துமதம்" உலகின் மிகப்பழமையான மதங்களில் ஒன்றாகும். பல்லாயிரம் வருடங்களாக இந்த நாட்டில் மக்கள் பின்பற்றிவரும் இந்துமதத்திற்கு இடையில் சிலகாலம் வேற்றுமத அக்கிரமிப்பாளர்களால் சிறிதுதொய்வு ஏற்பட்டது. அப்படிப்பட்ட காலத்தில் பிறந்து, பாரதமெங்கும் பயணித்து, இந்து மதத்தை மீட்டெடுத்தவர் மகான் ஆதிசங்கரர்.

அனைத்து ஜீவன்களிலும் இருக்கும் பிரம்மம் ஒன்றே என்னும் “அத்வைத சித்தாந்தத்தை” போதித்தவர்.
அத்வைத தத்துவத்தை உலகிற்கு நிலைநாட்ட ஆதிசங்கரர் பிரம்மசூத்திரம், உபநிடதம் மற்றும் விஷ்ணு சஹஸ்ரநாமம் ஆகியவற்றிற்கு விளக்கவுரை எழுதியுள்ளார்.
அத்வைதம் என்றால் இரண்டற்று என்றுபொருள். அதாவது பிரம்மம் (பரம்பொருள்) ஒன்றே உண்மை; மற்றவை பொய்த்தோற்றம் என்ற கொள்கையுடையது அத்வைதம்.

**ஆதிசங்கரர் நிறுவிய மடங்கள்**

அத்வைத தத்துவதை பறப்புவதற்காக ஆதிசங்கரர் இந்தியாவின் நான்கு திசைகளிலும் நான்கு மடங்களை நிறுவினார். அவருடைய நான்கு முக்கிய சீடர்கள் இந்த நான்கு மடங்களின் முதல் பீடாதிபதி ஆனார்கள்: அவர்கள்

1. கிழக்கே பூரிஜெகந்நாத்தில் ரிக்வேத பிரதானமாக, கோவர்த்தன மடத்தை நிறுவி அதன் பீடாதிபதியாக பத்மபாதரை நியமித்தார்.

2. தெற்கே சிருங்கேரியில் யஜூர் வேத பிரதானமாக, சாரதா மடத்தை நிறுவி சுரேஷ் வராச்சாரியாரை பீடாதிபதியாக்கினார்.

3 மேற்கே துவாரகையில், சாம வேத பிரதானமாக ஒரு மடத்தை நிறுவி ஹஸ்தமாலாகாவை பீடாதிபதியாக நியமித்தார்.

.4 வடக்கே பத்ரியில் அதர்வண வேத பிரதானமாக ஜோதிர் மடத்தை நிறுவி தோடகாச்சாரியாரை பீடாதிபதியாக நியமித்தார்.

References


http://agathin-kural.blogspot.com/2018/09/adhi-sankarars-life-history.html

1. https://ta.wikipedia.org/ஆதி_சங்கரர்
2. https://www.vikatan.com/spiritual/temples/63941-some-quotes-of-aadhi-sankarar

---o--

# 4.மகான் ஸ்ரீஇராமானுஜர்






https://en.wikipedia.org/wiki/Ramanuja#/media/File:Ramanujacharya.jpg
https://www.istampgallery.com/ramanujacharya/

காலம் - கி.பி .1017 - 1137
புகழ்பெற்ற வைணவ ஆச்சாரியர்களில் முதன்மையானவர் இராமானுஜர். கி.பி. 1017ல் ஸ்ரீபெருமந்தூரில் பிறந்தார்(தமிழ்நாடு).
இராமானுஜர் இந்து தத்துவப்பிரிவுகளில் ஒன்றான (வேதாந்தத்தின் விளக்கங்களில் ஒன்றான) "விஷிஷ்டாத்வைத" முன்னோடியாக விளங்கியவர்.
ஜாதிக்கு முக்கியத்துவம் தராத புரட்சியாளர் ஸ்ரீஇராமானுஜர் தான். வைணவத்தில் உயர்ந்தவன் – தாழ்ந்தவன் என்ற இன வேறுபாடில்லை. வைணவன் என்றாலே பெருமாள் பக்தன். பெருமாளுக்கு அடியார்கள் அனைவரும் ஒன்றுதான் என்ற புரட்சிக் கருத்தினை கூறியவர் ஸ்ரீராமானுஜர்.

இராமானுஜர் பாரததேசம் முழுவதும் புனித யாத்திரை செய்து வைணவத்தின் பெருமையை பறை சாற்றினார்கள்.

படித்தவர்கள் முதல் பாமரர்கள் வரை அனைவரையும் ' நாராயணன் வழிபாடு' என்ற ஒற்றை குடையின் கீழ் இணைத்தவர் ஆவார். “வைணவ மதத்தை” தனது “விஷிஷ்டாத்வைத” தத்துவத்தை கொடுத்து மீட்டெடுத்தவர். “யதிராஜர்” என்று வைணவர்களால் அழைக்கப்படும்” ஆன்மிகப் புரட்சியாளர்” “ஶ்ரீராமானுஜர்”.

அனைத்து ஜாதியினரையும் சமமாக நடத்தியவர். ஒவ்வொருவரிடமும், முக்கியமாக தாழ்த்தப்பட்ட இனமக்களிடையேயும், இரக்கம், கருணை, பரிவு முதலிய நற்குணங்களைச் சொரிந்ததோடு "திருகுலத்தார்" என்றும் அவர்களை அழைக்கலானார்.

தமிழ்பிரபந்தங்களை ஓதவும் வைணவச் சின்னங்களை தரிக்க, ஆணோ, பெண்ணோ எல்லோருக்கும் வைணவத்தில் இடம் இருக்கச் செய்தார்.
வைணவகோவில்களில் தமிழ்வழி இறைவழிபாட்டிற்கு வித்திட்டவர். பலமுறை கேட்டுக் கொண்டதற்கிணங்க , " ஓம்நமோநாராயணா " என்ற மந்திரத்தை திருக்கோஷ்டியூர் நம்பி, இராமானுஜருக்கு உபதேசித்தார். அந்த அஷ்டாக்ஷ்ரா (எட்டெழுத்து) மந்திரத்தை திருக்கோஷ்டியூர் கோவில் மதிலின் மேல் ஏறி அனைவருக்கும் அருளியதால் ‘எம்பெருமானார்’ எனப்படுகிறார்.

**குறிப்பு**: இந்த மகானின் – ஆச்சாரியனின் வாழ்க்கையை, நாடக காட்சிகளாக அமைத்து ஒளிபரப்பியவர் நாத்திகவாதியாக தன்னை அடையாளப்படுத்திய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் ஆவார். அந்த மகானின் நாடகத்தை உயர்வகுப்பினர் பாராட்டி சிலமுறை தொலைக்காட்சிகளில் ஒளிபரப்ப வேண்டிக்கொண்டனர்.

References

https://ta.wikipedia.org/இராமானுசர்
https://tamil.oneindia.com/astrology/news/sri-athikesava-perumal-temple-sri-perumputhur/articlecontent-pf306572-318869.html

https://www.maalaimalar.com/devotional/devotionaltopnews/2017/05/17145035/1085698/ramanuja-life-history.vpf
https://tamil.indianexpress.com/lifestyle/why-we-need-ramanujar/
https://temple.dinamalar.com/ramanujar/detail.php?id=67701

……………O………….

# 5.மகான் /ஸ்வாமி பசவா / பசவேஷ்வர





Fig.1 Fig. 2.

Fig. 1.This is the world's tallest Basava statue (108 feet) located in Basava Kalyana, Karnataka India. Inaugurated on 28th October 2012.

https://en.wikipedia.org/wiki/Basava#/media/File:Basava_Gaint_Statue_108_feet,_Basava_Kalyana.JPG

Fig.2. Honourable Prime Minister, Sri Narendra Modi ji Pays homage at the statue of the Indian philosopher Basaveshwara after unveiling it in London on the south bank of the Thameson Nov 14, 2015 . Later he tweeted: ``Basaveshwara Statue unveiled today will be an inspiration for those believing in democratic ideals & humanity."
https://scroll.in/article/876607/an-anti-caste-rationalist-basava-is-being-appropriated-by-those-whose-ideals-are-opposed-to-his

காலம் - கி.பி . 1105 -68.

பசவா (Basava அல்லது Basavanna) கி.பி . 12ம் நூற்றாண்டில் கர்நாடகாவில் உயர்ஜாதியில் பிறந்தவர்.

'வீரசைவம்' என்ற புதியமதத்தை உருக்கியவர். இவரைப் பின்பற்றுவோர் வீரசைவர்கள் (லிங்காயத்துகள்) என்றழைக்கப்படுகின்றனர். அவர்கள் ஒரு சிறுலிங்கத்தை (இஷ்டலிங்கம்) தங்களுடலில் அணிந்து கொள்ளுமாறு மகான் கூறினார்கள். இந்நெறி சிவனை மட்டுமே கடவுளெனக் கருகியது. சிவவழிபாட்டின் மூலம் வீடு பேற்றை அடையலாம் என்பது இவரது ஆழ்ந்த நம்பிக்கை.

தனது கருத்துக்களை 'வச்சனா' (உரைநடையுடன் கூடிய இசைப் பாடல்கள்) மூலம் பரப்பியவர்

சாதிப்பாகுபாடு, சடங்குகள், உருவவழிபாடு இவற்றை களைவதில் பெரிதும் ஈடுபட்டார். தனது கொள்கைகளை பின்பற்றியவர்கள் புலால் உண்பதையும், கள்குடிப்பதையும் கைவிட வேண்டும் என்ற கடுமையான நிபந்தனை விதித்தார். சமூக சீர்திருத்தவாதியாக விதவை மறுமணத்தை ஆதரித்தும், குழந்தை திருமணத்தை எதிர்த்தும் செயல்பட்டார்.

இவரைப் பின்பற்றுவோர் 7 கட்டளைகளை (Commandments) பின்பற்ற வேண்டும் முறையே .

| | |
|---|---|
| 1 …do not steal<br><br>2…do not kill<br><br>3…no falsehood foul thy tongue<br>4…not anger burn thy brow<br>5…bear with one another<br>6…suffer all men<br><br>7…stand not high in thy own esteem. | 1. திருடாதே<br>2. உயிர்க்கொலை செய்யாதே<br>3. தற்பெருமைகூடாது<br>4. கோவம் /சினம் / சிற்றம்கூடாது<br>5. அனைவரையும் அனுசரித்து செல்லவும்<br>6. பிறர் துன்பங்களை தாங்கிக்கொள்<br>7. கர்வப்படாதே |

மேற்கண்டவற்றை பின்பற்றினால் இறைவன் ' கூடலசங்கமாவை " அடையலாம்.

**அவரது கருத்துக்கள்**

1. வச்சனா (உரைநடையுடன் கூடிய இசைப்பாடல்கள் ) - Vachana (Poetry)
2. மனித உரிமைகள்
3. தீண்டாமை எதிர்ப்பு
4. மனிதர்கள் நடமாடும் தெய்வங்கள்
5.கோயில்கள் நிற்கும் பொருள் - மனிதர்கள் நடக்கும் பொருள் / நடமாடும் தெய்வம்
6. மக்கள்நலன் சார்ந்த நாடு- Welfare State (Sharanas)
7. உழைப்பே உயர்வு
8. உழைப்பேதெய்வம்.

தீண்டாமை , ஆண்- பெண்வேறுபாடு , கோயில்கள் என்ற பெயரில் பொதுமக்கள் சுரண்டப்படுவது (exploitation), சடங்குகள் , சம்பிரதாயங்கள் கண்டு வெறுப்புற்று. தீண்டத்தகாதவர்களென்று கருத்தப்பட்டவர்களுடன் உணவருந்துதல் (தினமும் பல்லாயிரக்கணக்கான மக்கள் அவர் வீட்டில் உணவருந்தினர்) நடைமுறைப்படுத்தினார்.

கோயில்களை நிற்கும் பொருளென்றும் மனிதர்களை நடக்கும் கோயிலென்றும் உவமைப்படுத்தியவர்; (திருமூலரின் கருத்துடன் ஒத்துப்போவது) மற்றும் நிற்பன அழியும், நடப்பான என்றும் நிலைத்திருக்கும் என்ற புரட்சிகரமான கருத்துக்களை வெளிப்படுத்தியவர் .

'அனுபவ மண்டபவம் ' நிறுவி பலதரப்பட்ட மக்கள் தங்கள் கருத்துக்களை பரிமாறி கொள்ள / கலந்துரையாட ஏற்பாடு செய்தார்கள்.

நாடு என்பது – மக்கள்நலன் சார்ந்த நாடாக (welfare state) இருக்க வேண்டுமென்று உரைத்தவர்,

Box 1: நாடு – திருவள்ளுவர் என்ன கூறுகிறார்?


உரு பசியும் ஓவாப்பிணியும் செருபகையும்
சேராதியல்வது நாடு.

இன்றைய நாடுகளின் நிலையை சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பே உலகிற்கு எடுத்துக்கூறியவர்.

References
https://en.wikipedia.org/wiki/Basava
https://ta.wikipedia.org/wiki/பசவர்

...............O.............

# 6.சுவாமி குருநானக்ஜி



https://www.sikhiwiki.org/index.php/File:Nanakpicnanaksar.jpg

காலம் : 1469 - 1539.

உருவாக்கிய மதம் : சீக்கிய மதம்

சுவாமி குருநானக்ஜி கி.பி 16 ம் நூற்றாண்டுல் பஞ்சாப் மாநிலத்தில் தோன்றிய மகான். ஏப்ரல் 15, 1469 அன்று பிறந்தார். இப்போது அவ்விடம், பாகிஸ்தானின் லாகூர் அருகிலுள்ளது நன்கானசாஹிப் என்று அழைக்கப்படுகிறது. பின்னாளில் சீக்கியமதத்தை நிறுவி அந்த மதத்தின் கடவுளானார்கள். பத்து சீக்கிய குருக்களுள் முதல்குரு ஆவார். அவரது போதனைகள் அடங்கிய நூல் “கிரந்தசாகிப்” – சீக்கியர்களின் புனித நூலாகிறது. சுல்தான்கள் மற்றும் முகலாய மன்னர்கள் காலத்தில் மக்களிடம் இந்து – முஸ்லீம் வேறுபாடு மிகுந்திருந்த காலத்தில், “இறைவன் ஒருவனே” என்ற அருளுரை வழங்கி மக்களிடையே சமயங்களுக்கு அப்பாற்பட்டு மதஒற்றுமை ஏற்படுத்தியவர்.

இந்து குடும்பத்தில் குருநானக் பிறந்திருந்தாலும், தாம் இந்துவோ - முஸ்லிமோ அல்ல என்று கருதி வந்தார். "நான் இந்துவோ, முஸ்லிமோ அல்ல. பின் யாருடைய பாதையை நான் பின்பற்ற? நான் கடவுளின்

பாதையை பின்பற்றுகிறேன். ஏனெனில் கடவுள் எந்தமதத்தையும் சார்ந்தவர் இல்லை," என்கிறார்.

உணவுக்கூடம் நிறுவி சமபந்தி உணவு உண்ணும் முறையை தொடங்கி பசித்தவர்களுக்கு என்றும் உணவளிக்கும் உணவு கூடத்தை தொடங்கி வைத்தார்கள்.

குருநானக்ஜீ, "தான்" என்ற எண்ணத்தால்விளையும் ஆபத்துகளை சுட்டிக்காட்டி, தன் பக்தர்களை கடவுள் நாமத்தால் வழிபட வேண்டும் என்றும் - ஆனால் அந்த வழிபாடுகள் தன்னலமற்றதாக இருக்க வேண்டும். இவை , கடவுளின் விருப்பப்படியே அனைத்தும் நடக்கும். அவர் இல்லையேல் இவ்வுலகில் எதுவும் இல்லை, என்ற கொள்கையை தழுவியது. குருநானக்கை பொறுத்த வரை, துறவறம் போன்ற நடைமுறைகளை புறக்கணித்து, இல்லறவாழ்வில் ஈடுபட்டு, தெய்வப்பற்று பெற்று வாழ வேண்டும் என அருவுறுத்துகிறார்கள்.

**அவரது போதனைகள்**

1.மனிதர்கள் அனைவரும் சாதி, மதம், மொழி, இனங்களுக்கு அப்பாற்பட்டு சகோதரத்துவுடன் வாழவேண்டும்.

2. சமத்துவம் – (மனிதர்கள் யாருக்கும் அடிமையில்லை).

3. சாதி வேறுபாடுகள் கூடாது

4. பெண்கள் ஆண்களுக்கு சமம்; அவளின்றி இந்த உலகில் எந்த ஒரு பெரிய சக்தியும்/ மனிதர்களும் உருவாகமுடியாது.

சுவாமி குருநானக்கின் போதனைகள் மூன்று வழிகளில் - ' வந்த்சக்கோ' ' கிரேட்கரோ ' மற்றும் 'நாம்ஜப்னா ' செயல் படுத்தப்பட்டு வருகிறது (Vaṇḍ Chakkō, Kirat Karo and Naam Japo).

1.வந்த்சக்கோ (பிறருக்கு உதவுவது ) : தேவை உள்ளவர்களுக்கு உதவி-செய்தல் , மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுதல்.

2.கிரேட் கரோ (பிறரை சுரண்டாமல் நேர்மையாக வாழ்வது): சுரண்டல் அல்லது மோசடி இல்லாமல் , நேர்மையாயான ஒரு வாழ்க்கையை உருவாக்கிக் கொள்ளுதல் .

3. நாம் ஜப்னா - அகத்தூய்மையுடன் கடவுளிடம் பிராத்திப்பது.

**சுவாமிகளின் காலடிப்பட்ட / அவருடன் தொடர்புடைய சில இடங்கள்**

சுவாமி குருநானக்ஜி அவர்கள் தனது பயணத்தின் போது பிதார் - (கர்நாடகா மாநிலம்) சென்றார். அவரை வணங்கி ஆசீர்வாதம் பெற்ற மக்கள், தங்களின் வறண்ட பூமியிலுள்ள குடிநீர்பிரச்சனையை கூறினார்கள். சுமார் 50 அடி உயரத்திலுள்ள குன்றின் ஓரிடத்தில் (இன்று புனித தலமாக உள்ளது). தனது புனித கால்களால் பூமியை தொட்டார் . என்ன அதிசயம் - உடனே நீரூற்று தோன்றியது. (இக்கட்டுரையாசிரியர் இந்த புனிததலத்திற்கு 2 முறை சென்றுள்ளார். அதுமட்டுமல்லாமல் அந்த புனித நீரை அருந்தி மட்டற்ற மகிழ்ச்சி அடைந்துள்ளார்).

References


https://ta.wikipedia.org/wiki/ /குரு_நானக்
https://en.wikipedia.org/wiki/Vand_Chhako
https://en.wikipedia.org/wiki/Kirat_Karo
https://en.wikipedia.org/wiki/Naam_Japo
https://en.wikipedia.org/wiki/Five_Thieves
https://www.bbc.com/tamil/india-50385684
https://www.aanthaireporter.com/guru-nanak-dev-ji/
https://timesofindia.indiatimes.com/travel/things-to-do/guru-nanak-jayanti-2017-go-on-a-gurudwara-trail-this-guru-parv/as61004795

...............O.............

# 7.மகான்/சுவாமி இராமலிங்க அடிகளார்

# (**மகான்**/சுவாமி திருவருட்பிரகாசவள்ளலார்)






https://en.wikipedia.org/wiki/Ramalinga_Swamigal#/media/File:Vallalar_drawing.jpg
http://www.indianphilatelics.com/stamps/commemorative-stamps/2006-2007/item/14500-saint-vallalar-ramalinga-adigal-click-for-stamp-information.html

வள்ளலார் என்று அழைக்கப்படும் இராமலிங்க அடிகளார் வாழ்ந்த காலம் 05.10.1823 முதல் 30.01.1874 வரை ஆகும். திருவருட்பிரகாசவள்ளலார் என்ற சிறப்பு பெயர் பெற்றவர்.
அனைத்துச் சமய நல்லிணக்கத்திற்காக சன்மார்க்க சங்கத்தை நிறுவினார். அறிவு நெறிவிளங்க சிதம்பரம் அருகே உள்ள வடலூரில் சத்தியஞான சபையை அமைத்தார்.

வடலூர் சத்திய தருமசாலையில் பசியால் வாடும் மக்களுக்குக் சோறிட இவர் அன்று மூட்டிய அடுப்பு இன்றும் அணையாமல் தொடர்ந்து பசிப்பிணி தீர்த்து வருகிறது ( சுவாமி குருநானக்ஜி போல்). முன்பெல்லாம் வடதமிழ்நாட்டில் பல கிராமங்களில் அவர்பெயரை தன் மகன்களுக்கு பெயர் சூட்டினார்கள்.

இவர் ஓர் ஆன்மீகவாதி ஆவார். இவர் சத்திய ஞானசபையை நிறுவியவர் . "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்." என்று பாடியவர். கடவுள் ஒருவரே என்ற கருத்தை வலியுறுத்தியவர்.

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க ! “கொல்லா நெறியே குருவருள் நெறி” என்றார் கள். அனைத்து உயிர்களும் இறைவனின் குழந்தைகள். அவற்றை சமமாக பாவிப்பதும், கருணையால் உபசரிப்பதும் மட்டுமே திருவருளுக்கு உகந்தது என்றார் .

"ஜீவகாருண்யமே முக்தி என்ற வீட்டின் திறவுகோல்", எனவே, உயிர்களை பசியிலிருந்து காப்பதும், பிணியிலிருந்து விடுவிப்பதும், இயலாதோரை பேணிக்காப்பதும் இறைத்தொண்டு ஆகும் என கூறியவர். "சீவகாருண்யமே ஒழுக்கம்” மற்றும், “மனு முறை கண்ட வாசகம்” என்ற நூல்கள் இவர் எழுதியவை. இவர்பாடல்கள் அனைத்தும் திருவருட்பா என்னும் தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ளன.

**அவரதுகருத்துக்கள்**

1. கடவுள் ஒருவரே. அவர் அருட்பெருஜோதி ஆவார்.

2. புலால் உணவு உண்ணக்கூடாது.

3.எந்த உயிரையும் கொள்ளக்கூடாது. 'எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க'. எந்த உயிரையும் கொல்ல யாருக்கும் உரிமையில்லை. உயிரைக் கொல்வது இறைவன் முன் ஏழுவகைப் பிறவியிலும், தண்டனைக்குரிய குற்றமாகும்.

4. சாதி, மதம், இனம், மொழி முதலிய வேறுபாடுகள் கூடாது.

5.பசித்தவர்களுக்கு சாதி, மதம், இனம், மொழி முதலிய வேறுபாடுகள் கருதாது உணவளித்தல் வேண்டும்.

6. சிறுதெய்வ வழிபாடு கூடாது. அவற்றின் பெயரால் பலி இடுதலும் கூடாது

7. எல்லா உயிர்களும் நமக்கு உறவுகளே. அவற்றைத் துன்புறுத்தக் கூடாது.

10. மதவெறி கூடாது.

தாழ்த்தப்பட்ட மக்கள் கோயில்களுக்குள் அனுமதிக்கப்படாத காலத்தில், சகலமதத்தைச் சேர்ந்தவர்களும் ஒன்றுகூடி வழிபடக்கூடிய சத்தியஞான சபையை அமைத்தார். மேலும்,

1. பெண்களுக்கு ஏட்டுக்கல்வி தரக்கூடாதென்ற மூடத்தனத்தை எதிர்த்தார். ஆண் – பெண் வேறுபாடியின்றி எல்லாப்படிப்பையும் பெண்களுக்குச் சமமாகக் கற்று கொடுக்க வேண்டும்

2.சைவ இலக்கியங்கள் தவிர பிறவற்றை கற்கவும் கற்பிக்கவும் கூடாது என்று சைவமடாதிபதிகள் விதித்திருந்ததடையை மீறி மக்களுக்கு திருக்குறளை கற்பித்தார் வள்ளலார்.

3.வடமொழியின் துணையின்றி தமிழ் தனித்து இயங்கமுடியாது என்ற கருத்தோட்டத்துடன் சைவமடங்களில் வடமொழி கர்ப்பிக்கப்பட்டது. ஆனால் வள்ளலார் தமிழ் என்றும் தனித்தியங்க வல்லது என்று உறுதியாக உரைத்தார் . தமிழ் தொன்மையானது, சிறந்தது, அதிலிருந்து தான் உலகமொழிகள் யாவும் கிளைத்தன என்றும் கருத்தை வெளியிட்டார்.

**திருவருட்பா**

இவர்பாடிய பாடல்களின் திரட்டு, “திருவருட்பா” என்று அழைக்கப்படுகிறது. இது ஆறு திருமுறைகளாக பகுக்கப்பட்டு உள்ளது. திருவருட்பாவில் உள்ள முருகன்/ கந்தகோட்ட குமரன் – இறைவணக்கப்பாடல் -

‘ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும்

உள்ளொன்று வைத்துப்புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்….’ பலப்பல லட்சம் மக்களின் மனதில் நீங்காத இடம் பெற்றுள்ளது. சில திரைப்படங்களிலும் இடம் பெற்றுள்ளது.

“அருட்பெரும்ஜோதி! அருட்பெரும்ஜோதி!!

தனிப்பெரும்கருணை!அருட்பெரும்ஜோதி!!”


References

https://www.patrikai.com/today-in-history-vallalar-birth-day/

https://ta.wikipedia.org/wiki/இராமலிங்க_அடிகள்#cite_note-8
http://www.vallalar.org/tamil
http://vallalarphilosophy.org/ta/வள்ளலார்-வாழ்க்கை-வரலாறு/
https://tamil.oneindia.com/astrology/news/ramalinga-adigalar-a-vallalar-197-birthday-today/articlecontent-pf404719-364856.html
https://www.youtube.com/watch?v=TtwkPQpUzTg
https://www.youtube.com/watch?v=QAL7XqioINw
https://www.youtube.com/watch?v=_UBdH5YiSlg
https://www.youtube.com/watch?v=Ny-rnP8Fw8M

...............O.............

## 8.மகான் / சுவாமி நாராயணகுரு




https://en.wikipedia.org/wiki/Narayana_Guru#/media/File:Narayana_Guru_1967_stamp_of_India.jpg

காலம்: ஆகஸ்ட் 28, 1855 - செப்டம்பர் 20, 1928

ஜாதி மற்றும் தீண்டாமை ஒழிப்பு சமூக சீர்திருத்தவாதி. இந்து மத சீர்திருத்தவாதி.

இந்தியா முழுவதும் பரவிருந்த சாதிக்கொடுமை பெருகியிருந்த காலம் கேரளாவில் பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு அடிப்படை உரிமைகள் பல மறுக்கப்பட்ட காலகட்டத்தில் ஈழவர்சமூகத்தில் பிறந்தவர் நாராயணகுரு. ஈழவர் சமுதாயம் அந்தசமயத்தில் கடுமையான ஒடுக்குமுறைக்கு உள்ளான சமுதாயம்

என்பது குறிப்பிடத்தக்கது. குருதேவன் என்று அவரது சீடர்களினால் அழைக்கப்பட்ட நாராயணகுரு, ஒடுக்கப்பட்டமக்கள்கோவில்களுக்குள் நுழைய அனுமதிக்காத காலத்தில் ( ஏன் கோவில் தெருக்களில் கூட நடக்க முடியாத காலத்தில்) தானே இறைவனைவடித்து, கோவில்கட்டி ஓர் இயக்கத்தை உருவாக்கியவர்- அந்த இயக்கத்தின் பெயர் ‘அருவிபுரம் இயக்கம்’.

**ஶ்ரீநாராயணதர்ம பரிபாலான சபா**

ஆன்மிக வழியில் புதிய நடைமுறைகளை உருவாக்கி பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்களுக்கு ஒரு புதியவழியைக்காட்டியாக ஶ்ரீநாராயணகுரு ஶ்ரீநாராயணதர்ம பரிபாலனசபாவின் மூலம் ஏராளமான பள்ளிகளையும் கல்விக்கூடங்களை நிறுவினார். கல்வி மற்றும் சமூக நிறுவனங்களை அதிக அளவில் கொண்ட ஒருபெரிய அமைப்பாக ஶ்ரீநாராயண தர்மபரிபாலனசபா உருவானது. இதன் மூலம் கேரளாவில் பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்கள் அனைவரும் கல்வி கற்க முற்பட்டனர். இன்று இந்தியாவில் கேரளா மாநிலம் நுறு சதவிகிதம் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள்-அனைவரும் கல்வி அறியுடையவர்கள் என்கிற முதல்நிலையைப் பெற்றிருப்பதற்கு அடிப்படைக்கரணம் ஶ்ரீநாராயணதர்ம பரிபாலன சபாவின் கொள்கைகள், கோட்பாடுகள் மற்றும் அதன் செயப்பாடுகள் தான் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

**ஶ்ரீநாராயணகுருவின் தத்துவங்கள்**

மதங்கள் வெவ்வேறு அல்ல. அனைத்தும் அந்த ஒரேசத்தியத்தை நோக்கியே இட்டுச்செல்கின்றன என சொன்னதுடன், மனிதர்களுக்கு “ஒருஜாதி – ஒருமதம் - ஒருதெய்வம்” என்று பறைசாற்றினார்கள்.

**பெருமைகள்**

மகாத்மாகாந்தி இவரை ' அவதாரபுருஷர்' எனப் போற்றினார். பாரதியார் இவருடைய சமூகசீர்திருத்தக் கொள்கைகளையும், சமஸ்கிரத படைப்புகளையும், வெகுவாகப் பாராட்டியுள்ளார். ஓர்ஆன்மிக பயணத்தின் போது, மகான் இரமணமகரிஷி ஸ்ரீநாரயயன குருவையழைத்து பெருமைப்படுத்தினார்கள். குருதேவ் ரவீந்திரநாத்தாகூர் அவர்கள் சிவகிரி ஆஸ்ரமத்திற்கு சென்று ஸ்ரீநாராயணகுரு அவர்களை **போற்றி பாராட்டினார்**. மேலும் காந்தியடிகள், நாராயணகுருவுடனான சந்திப்பை சிறந்தவாய்ப்பாக கருதுகிறேனென்று கூறினார்கள்.

## மகானின் அருளுரைகள்

1. மனித இனத்திற்கு ' ஒரேஜாதி! ஒரேமதம் !! ஒரேகடவுள் !!!

2. எவரும் யாருடைய ஜாதியை கேட்காதே! கேட்டாலும் சொல்லாதே!! ஜாதியைப்பற்றி என்றும் சிந்திக்காதே! ! !

3.கல்வியின் மூலம் முன்னேற்றம் காண்!. இயக்கங்கள் மற்றும் அமைப்புகள் மூலம் சக்தியை பெரு !

4. மது ஒரு விஷம்- மதுவை தயாரிக்காதே! மதுவை விற்காதே!! மதுவை அருந்தாதே!!!

## முடிவுரை

இன்றும் ஈழவர்கள் தங்கள் விட்டு சுபநிகழ்ச்சிகளில் இந்து கடவுள் படங்களுடன் சுவாமி நாராயணகுரு அவர்களின் படத்தையும் இணையாக வைத்து வழிபடுகின்றனர். இவரது நினைவாக இந்தியஅரசு தபால்தலை வெளியிட்டது.

----O-----

# 9.மகான் பாபா சாகேப் பீம்ராவ் ராம்ஜி அம்பேத்கர்




Source: https://commons.wikimedia.org/wiki/User:Shivashree

இடம் : நாக்பூரின் தீக்சாபூமியில் பாபாசாகேப் அம்பேத்கரின் 22 உறுதி மொழிகள் எழுதப்பட்ட கற்றளி.

https://ta.wikipedia.org/wiki//அம்பேத்கர்#/media/படிமம்:I wentytwo_vows_of_Buddhism by Dr. Ambedkar_at_Deekshabhoomi.jpg

https://ta.wikipedia.org/wiki//அம்பேத்கர்#/media/படிமம்:Twenty-two_vows_of_Buddhism_by_Dr._Ambedkar_at_Deekshabhoomi.jpg

காலம்: பாபாசாகேப் என்றழைக்கப்படும் பீம்ராவ்ராம்ஜி அம்பேத்கர் அவர்கள் காலம் (14 ஏப்ரல் 1891 - 6 திசம்பர் 1956).

புதிய "புத்தமதம் " உருவாக்கியவர்

விடுதலை இந்தியாவின் அரசியல் சாசனத்தை வரைந்த மாபெரும் சட்டமேதை. தாழ்த்தப்பட்ட மற்றும் அடித்தட்டு மக்களுக்காக குரல் கொடுத்தவர். தாழ்த்தப்பட்ட மக்களின் விடிவெள்ளியாய், ஈடுஇணையற்ற ஜோதியாய் விளங்கிய சமூகப்போராளி. இந்திய விடுதலைக்குப் பின்னர் நாட்டின் முதலாவது சட்டஅமைச்சராக பதவியேற்றவர். பரோடாமன்னருடன் இணைந்து தீண்டாமை ஒழியப்

போராடியவர்; பொருளாதாரம், அரசியல், வரலாறு, தத்துவம், சட்டம்ஆகிய துறைகளில் தேர்ந்தவர்; ஆசிரியராகவும், இதழாளராகவும், எழுத்தாளராகவும் சமூகநீதிப் புரட்சியாளராகவும் விளங்கியவர்.

இந்திய ரிசர்வ்வங்கி உருவாக்கத்தில் இவருக்கு பங்குண்டு.

**தீண்டாமை மற்றும் சாதிப்பிரிவினை**

தாழ்த்தப்பட்ட மக்களின் பொருளாதாரம் மற்றும் சமூகத்தில் அவர்களது நிலைமை மாற வேண்டும் என்று நிறைய போராட்டங்ககளில் ஈடுபட்டார். தீண்டாமை மற்றும் சாதிப்பிரச்சனை இவை இரண்டையும் முற்றிலுமாக ஒழிக்க தாழ்த்தப்பட்ட மக்களிடையே தனது பேச்சுகள் மூலம் விழிப்புணர்வினை ஏற்படுத்தினார்.

**பௌத்தசமயம் மீது பற்று**

தம்முடைய சமூகப் போராட்டத்திற்கு, தாம் இந்துமதத்தில் இருப்பதே ஒரு பெரியதடையாக கருதிய அவர், பௌத்த சமயக்கொள்கைகளின் மீது ஈடுபாடு கொண்டு, 1950 ஆம் ஆண்டுக்கு பிறகு பௌத்தசமயத்தின் மீது தன் கவனத்தை செலுத்தினார். 1955 ஆம்ஆண்டு “பாரதீய பௌத்த மகாசபாவை" தோற்று வித்தார். 1956 ல் "புத்தரும் அவரின் தம்மாவும்'' என்ற புத்தகத்தை எழுதினார். பிறகு 1956 ஆம் ஆண்டு அக்டோபர் 14ஆம்நாள் தமது ஆதரவாளர்களுடன் புத்தமதத்தில் இணைந்தார். அவரைப்பின்பற்றி பலப்பல லட்சம் மக்கள் புதிய புத்தமதத்தை தழுவினார்கள். புதிய புத்தமதத்தை தழுவியவர்கள் இந்தியாவில் அதிகமாக மகாராஷ்டிரா மற்றும் உத்திரபிரதேசத்தில் உள்ளனர். பிறமாநிலங்களில் மிககுறைவாக உள்ளனர். டாக்டர் B.R. அம்பேத்கர் அவர்கள் புதியபுத்தமத்தை தோற்றுவிக்க காரணமாக கருதப்படுபவை:

1. தனது இனத்தை சார்ந்தவர்கள் இந்துமதத்திலிருக்கும் வரை சமத்துவம் கிடைக்காது – அவர்கள் சமூக மதிப்பீட்டில் தரம் தாழ்த்தி நடத்தப் படுவார்கள்.

2. தீண்டப்படாதவர்கள் முற்காலத்தில் புத்தமதத்தை சார்ந்தவர்களாக யிருந்தனர். மேலும் புத்தமதம் நமது இந்திய நாட்டில் உருவானது.

## பௌத்தமதத்தை தழுவிய பின் எடுத்துக் கொண்ட உறுதி மொழிகள்

நாக்பூரில் அக்டோபர் 14, 1956 அன்று, டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் அவர்கள் புத்த மதத்தை தழுவிய பின் எடுத்துக் கொண்ட 22 உறுதி மொழிகளில் சில இங்கே எடுத்துரைக்கப்பட்டுள்ளன:

1.புத்த நெறியின் எதிரான எந்த செயலிலும் ஈடுபட மாட்டேன்.

2. எல்லா மனிதர்களையும் சமமாக கருதுவேன்.

3. நான் சமத்துவத்திற்காக தான் பாடுபடுகிறேன்.

4. புத்தர் சொன்ன எட்டுவழிகலான நேர்மை, நியாயம், ஒழுக்கம் போன்ற அந்த எட்டு வழிகளையும் நான் கடைபிடிப்பேன்.

5. புத்தர் சொன்ன 10 உறுதி மொழிகளை/ நல்லொழுக்கங்களை தவறாது கடைபிடிப்பேன்.

6. நான் எல்லா மனிதர்களுக்கும் கருணை காட்டுவதும், அவர்களை அலட்சிய படுத்தாமல் அவர்களை பற்றிய சிந்தனைக்கு ஆளாவேன்.

7. நான் எந்த விதமான தீயபோதைக்கும் அடிமை ஆகமாட்டேன்.

8. நான் மதுவை குடிக்க மாட்டேன்.

9. புத்த நெறியின் தம்மம் என்கிற அறவழியில் உள்ள மூன்று கொள்கைகள் ஆன “தியானம், சீலம், கருணை” என்னும் அடித்தளங்கள் மீதே என் வாழ்கையை அமைத்து நடப்பேன்.

10. ஒரு புதிய பிறவியை (இப்பொழுதான்) எடுத்திருப்பதாக நான் எண்ணுகிறேன்.

11. இந்த நேரம் முதல் - இனிமேல் புத்தருடைய போதனைகள் வழியே நடந்து கொள்வேன் என்றும் சூளுரையை எடுத்து கொள்கிறேன்..... (http://ambedkarambeth.blogspot.com/2019/02/22-tamil-vows-dr-ambedkar-buddhismnagpur.html )

**முடிவுரை**

பலலட்சம் மக்களுக்கு ஏற்றத்தாழ்வற்ற ஒருமதத்தை உருவாக்கியதால் பாபாசாகேப் டாக்டர் BR அம்பேத்கர் அவர்கள் மதத்தில் புரட்சி செய்த மகனாகிறார்கள்.

...............O................

# 10.மகான் தந்தை பெரியார் ஈ. வெ. ராமசாமி






https://www.facebook.com/rationalist65/photos/
https://zeenews.india.com/tamil/tamil-nadu/tamil-nadu-periyar-e-v-ramasamy-biography-full-deails-304293

காலம்: செப்டம்பர் 17, 1879 - திசம்பர் 24, 1973)

1. ஈ.வே .ரா பெரியார் அவர்கள், தென்கிழக்கு ஆசியாவின் விடிவெள்ளி மற்றும் "தென்னிந்தியாவின் சாக்ரட்டிஸ்" என்று போற்றப்பட்டவர்.

2. இவர் சமூக சீர்திருத்தத்திற்காகவும், சாதி வேற்றுமையினை அகற்றுவதற்காகவும், மூடநம்பிக்கைகளை மக்களிடமிருந்து களைவதற்காகவும், பெண் விடுதலைக்காகவும், சாதி மற்றும் பாலின சமத்துவம் போன்ற கொள்கைக்காகவும் போராடிய மிகப்பெரிய பகுத்தறிவாளர்.

3. 1902-ம் ஆண்டுகளில் கலப்புத் திருமணங்களை நடத்தி வைத்தார். அனைத்து சாதியினருடனும் சமமாக சேர்ந்து உணவு சாப்பிட்டார்.

4. ஆரம்பகாலத்தில் காந்திய கொள்கைகளில் ஈடுபாடு கொண்டு 1919-ம் ஆண்டு தன்னை காங்கிரஸ் கட்சியில் இணைத்துக் கொண்டார். காந்தி தலைமையில் காங்கிரஸ் நடத்திய பல போரட்டங்களில் கலந்துக்கொண்டு சிறை சென்றார். காந்தியின் கதர் ஆடையை அவரும் உடுத்திக் கொண்டது மட்டுமில்லாமல், பிறரையும்

உடுத்தும்படி செய்தார், கள்ளுக்கடைகளை மூடவலியுறுத்தி மறியல் செய்தார், வெளிநாட்டுத் துணிவகைகளை விற்பனைசெய்யும் வணிகர்களுக்கு எதிராக மறியல்கள் நடத்தினார். தீண்டாமையை வேர்அறுக்கப்பெரும் பாடுபட்டார்.

5. அரசுப்பணிகளிலும், கல்வியிலும் இடஒதுக்கீட்டை ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை காங்கிரஸ்கட்சியினர் ஏற்க மறுத்ததால், தந்தை பெரியார் 1925-ம் ஆண்டு காங்கிரஸ் கட்சியை விட்டு விலகினார்.

6. **வைக்கம் போராட்டம்** (1924-1925)

கேரளாவில் வைக்கம் என்னும் ஊரில் கோயில்களில் நுழையவும், கோயில் வீதியில் நடக்கவும் தலித்/ ஈழவ மக்களுக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. அந்த தடையை எதிர்த்து நடந்த போரட்டத்தில் தந்தை பெரியார் கலந்து கொண்டு சிறை சென்றார். இந்த போராட்டதிற்கு பிறகு பெரியார் 'வைக்கம்வீரர்" எனஅழைக்கப்பட்டார். கேரள மாநிலத்தில் அவர் போராட்டம் நடத்திய வைக்கம் இடத்தில் தந்தை பெரியார் நினைவகம் அமைக்கப்பட்டுள்ளது.

7. **சுயமரியாதை இயக்கம்**

1925-ம் ஆண்டு சமுகத்தில் இருக்கும் மூடபழக்க வழக்கங்களை அகற்ற வேண்டும் என 'சுயமரியாதை இயக்கம்' தொடங்கினார். பகுத்தறிவுச் சிந்தனையுடன் மக்களின் செயல்பாடுகள் இருக்க வலியுறுத்தினார்.

8. **இறைமறுப்பாளார்**. சாதிக்கொடுமை, தீண்டாமை, மூடநம்பிக்கை, வர்ணாஸ்ரமதர்மம் – இம் மனநிலை வளரக்காரணமானவை மக்களிடையே இருக்கும் மூடநம்பிக்கையும், அந்த மூடநம்பிக்கைக்குக் காரணமாக இருக்கும் கடவுள் நம்பிக்கையும், கடவுள்பெயரால் உருவானசமயங்களும் தான் என்பதை கருத்தில் கொண்டு ஈ. வெ. ரா, தீவிர இறை மறுப்பாளாராக இருந்தார்.




https://ta.wikipedia.org/wiki/ஈ._வெ._இராமசாமி#cite_note-dk_movment-25

**முடிவுரை**

1. தந்தை பெரியார் தமிழ் எழுத்துகளின் சீரமைவுக்கு குறிப்பிடத்தக்கப் பங்காற்றியுள்ளார்.
2. இவருடைய பகுத்தறிவு, சுயமரியாதைக் கொள்கைகள் தமிழ்நாட்டின் சமூகப்பரப்பிலும், தமிழக அரசியலிலும் பலதாக்கங்களை ஏற்படுத்தியன.
3. பெரியார் ஈ.வெ.இராமசாமி 'பகுத்தறிவு பகலவன், 'வைக்கம்வீரர்' மற்றும் 'தந்தைபெரியார்' என பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறார்.
4. இன்றும் திராவிடர்கள் தலைநிமிர்ந்து சமத்துவத்தோடும், பகுத்தறிவோடும் வாழ்கிறார்கள் என்றால், அதில் தந்தை பெரியாரின் பணி மிகப்பெரியது. மாபெரும் சிந்தனையாளர் ‘பெரியார்' என்றால் அதுமிகையாகாது.
5. இன்று சமூகவலைதளங்களில் சிலர் தந்தைபெரியாரின் சமூகசீர்திருத்த அணுகுமுறையை குறை கூறுகின்றனர். பெரியார் அவர்கள் சுமார் 80-100 வருடங்களுக்கு முன்பிருந்த தமிழக சமூக சூழ்நிலையை மாற்ற (ஜாதிக்கொடுமை, தீண்டாமை, சமவாய்ப்பில்லாமை, இரட்டைக் குவளைமுறை) தனது மாறுபட்ட கருத்தை (lateral thinking) கூறினார்கள்; மாறுபட்ட அணுகுமுறையில்

செயல்படுத்தினார்கள். பெரியார் அவர்கள் தனது மாறுபட்ட கருத்துக்கள் மூலம் தமிழ் சமுதாயத்தை முன்னேற்றமடையவைத்து சென்றார்கள். எனவே அன்றைய பெரியாரை இன்றைய சமூககூழலில் விமர்சிப்பதை தவிர்க்கலாம். அவரை இனி தமிழ் கூறும் நல்லுலகம் குறைகூறாமல் இருப்பதே நல்லது. முடியுமானால் ஜாதிவேறுபாடுகளை அகற்றுங்கள்!


References

1. https://ta.wikipedia.org/wiki/ஈ._வெ._இராமசாமி
2. https://www.facebook.com/354866241255017/photos/pcb.1356180044456960/1356179804456984/?type=3&theater
3. https://ta.wikipedia.org/wiki/ஈ._வெ._இராமசாமி#cite_note-Saraswathi-1.155-13
4. https://ta.wikipedia.org/wiki/ஈ._வெ._இராமசாமி#cite_note-dk_movment-25
5. https://ta.wikipedia.org/wiki/ஈ._வெ._இராமசாமி#cite_note-Saraswathi-1.15-27
6. https://ta.wikipedia.org/wiki/ஈ._வெ._இராமசாமி#cite_note-Pandian-2-33
7. https://ta.wikipedia.org/wiki/ஈ._வெ._இராமசாமி#cite_note


.........................O...................

# 11.மகான்/ சுவாமி பங்காருஅடிகளார்



https://www.omsakthiamma.org/

(காலம் - மார்ச் 3, 1941-....)

அன்னை ஆதிபராசக்தியின் வடிவமாக கருதப்படுபவர்.

கோயில் பூஜையறை மற்றும் ஆன்மீகத்தில் புரட்சிசெய்தவர். கோவில்களில் உள்ளசிலைகளுக்கு ஆண்கள் மட்டும்தான் பூஜை மற்றும் அர்ச்சனைகள் செய்யவேண்டும் என்பதைமாற்றி மேல்மருவத்துர் ஆதிபராசக்திக்கு பெண்களே பூஜைகள், அர்ச்சனைகள் செய்யலாம் என்ற புதுமையை புகுத்தினார்கள். இன்று, சுமார் 2500 ஆதிபராசக்தி வழிப்பாட்டு மன்றங்கள் உள்ளன.

ஒரேதாய்! ஒரே மனிதகுலம் என்று போதித்தவர்.

ஜாதி, மதம், மொழி, இனம் போன்ற எந்த வேறுபாடும் மனதிர்களிலே கிடையாது என்று போதிக்கும் மகான். அவரது பக்தர்கள் கடல் கடந்து,

மதங்களுக்கு அப்பாற்பட்டவர்களாக உள்ளார்கள். அரபுநாடுகளிலிருந்துகூட பக்தர்கள் வருகின்றனர்.

உலகம் நல்வழிப்பட அருளுரைகள் வழங்குகிறார்கள். மழைவேண்டி வேள்விகள் செய்கிறார்கள். ஆன்மீகம் மூலம் மாந்தரை நல்வழிப்படுத்துகிறார்கள். கோயிலில் அர்ச்சனைத்தட்டு கிடையாது. காணிக்கை கிடையாது.

நலிந்தோர்க்கு தொழில் செய்யக்கருவிகள், ஏழைகளுக்கு மருத்துவஉதவி மற்றும் இலவச திருமணம் நடத்தி வைக்கிறார்கள்.

மேல்மருவத்தூர் மற்றும் கலவை அருகில் பல கல்வி நிறுவனங்களை நிறுவி கல்விப் பணியாற்றுகிறார்கள்.

இயற்கையான கருவறை உள்ளவர்களுக்கு மனிதனால் படைக்கப்பட்ட கோயில் கருவறையில் பெண்கள் நுழைய சில மதங்கள் இடம் கொடுக்கவில்லை. ஆனால் தனது புரட்சிக்கர செயலினால் இதை அருள் திரு அம்மா அவர்கள் தானே ஒரு மிகப்பெரிய கோயில் கட்டி அதில் பெண்கள் கருவறையில் நுழைந்து அர்ச்சனைகள் மற்றும் பூஜைகள் செய்ய ஆவண செய்துள்ளார்கள். அதனால் அவர் மதத்தில் புரட்சி செய்த மகானாகிறார்கள்.

........................O..................

# முடிவுரை

இந்து சிறு கட்டுரை மூலம் இந்துமதம் கடந்து வந்த பாதை சிறிது விளக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இந்து மக்களிடையே நிலவிய சமூக வேறுபாடும், சாதிக் கொடுமைகள், பெண்களின் அவல நிலை, கோயில்கள் மற்றும் மடங்களின் செயல்பாடுகள் போன்றவை பல மகான் தோன்ற காரணமாயிருந்தன. இன்றும் சாதிவேறுபாட்டால் நிலவி வரும் ஏற்றத்தாழ்வால் ஒரு பிரிவினர் மதம் மாறிக்கொண்டுத்தான் இருக்கின்றனர். வடக்கு தமிழகத்தில் கோயில் மணியோசை கேட்ட ஊர்களில்லெல்லாம் வேறு ஒரு ஆலய மணியோசை இன்று நேரத்தோடு கேட்கிறது. ஆனால் பலர் மதமாற்றத்திற்குப்பின் இன்றும் அதே சுற்று சூழலிலே வாழ்கின்றனர். தமிழகத்தில் பிரிட்டிஷ் இந்தியாவில் குறிப்பாக ரயில்பாதை ஒட்டிய பகுதிகளில் மட்டும் மதமாற்றம் நிகழ்ந்தது. மதமாற்றத்துடன் அவர்கள் கல்வியில் சிறந்து விளங்க சிறந்த பள்ளிகள் மற்றும் கல்லூரிகளை நிறுவினார். எனவே அவர்கள் வேலை வாய்ப்பை பெற்றனர். சமூகத்தில் உயர் நிலையை அடைந்தனர். ஆனால் இன்று சுதந்திர இந்தியாவில் பலப்பல கிராமங்களில், குறிப்பாக தமிழ்நாட்டில் மதம் மாறிய பின்னும் சாதிவேறுபாட்டால் அவர்கள் வாழ்வில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படவில்லை எண்பது சிலரின் கருத்து.

கடவுள் மறுப்பு இயக்கம் தோன்றிய தமிழகத்தில், இன்று இந்துக்கள்/ பெண்களிடம் ஏற்பட்டுள்ள எழுச்சியால் கோயில்களில் இறை வழிபாடு நாளுக்குநாள் அதிகரிக்கிறது. பெரும் மகிழ்ச்சியுடன் ஊர்களில் பலப்பல திருவிழாக்கள் முன்பில்லாத அளவிற்கு, எழுச்சியுடன் நடைபெறுகின்றன.

சுதந்திரமடைந்த பிறகு இந்தியஅரசு மற்றும் நமது தமிழ்மாநில அரசு பலப்பல சமூக சீர்திருத்த திட்டங்களை கொண்டுவந்து அனைத்து வகுப்பினரையும் ஓரளவிற்கு கல்வி, வேலைவாய்ப்பு,

சமூகஉயர்வு, என பலப்பல துறைகளில் முன்னேற்றமடைய செய்கின்றன.

இந்தியாவின் சில வட மாநிலத்தினர் எங்கள் மாநிலத்தில் மகான்கள் பெரியார் மற்றும் நாராயணகுரு போன்றவர்கள் தோன்றவில்லேயே என்று கருதுகின்றனர்.

**கடவுள் மறுப்பாளர்கள் கவனத்திற்கு**

இந்துமத கடவுள் மறுப்பு இயக்கம் தோன்றிய தமிழகத்தில் வாழும் எனக்கு ஓர் ஐயம்! கடவுள் இல்லை என்று மறுக்கும் சில தமிழர்கள் கடவுள் இல்லை யென்றால் - தேவாரம், திருவாசகம், நாலாயிரம் திவ்யப்ரபந்தம் மற்றும் பலப்பல கடவுள் சார்ந்த புனித நூல்கள் இருப்பது உண்மை- ஆனால், அவர்கள் கடவுளை பார்த்ததாக– குறிப்பாக ஆழ்வார்களும் நாயன்மார்ககளும் கூறுகிறார்கள். அவையெல்லாம் பொய்யா? உதாரணத்திற்கு, சுந்தரை இறைவன் திருவெண்ணெய் நல்லூரில் தடுத்தான்கொண்டது பொய்யா? – அவர்பாடிய பதிகம் "பித்தா பிறைசூடி...." என்ற கடவுள்வாழ்த்து பாடல் உண்மை, ஆனால் அவர் பார்த்த கடவுள் மட்டும் எவ்வாறு பொய்யாகும்? நந்தனாருக்கு திருப்புன்கூரில் நந்திவிலகியிருக்கிறதே அது எவ்வாறு பொய்யாகும். திருஞானசம்மந்தருக்காக, பட்டிஸ்வரத்தில் 'நந்தி' விலகியுள்ளது உண்மை - ஆனால் அவர் பார்த்த கடவுள் எவ்வாறுபொய்யாகும்?. சோழர் காலத்தில் தாராசுரம் ஐராவதேஸ்வர் கோயிலில் 63-நாயன்மார்களின் வரலாற்றை கல்வெட்டில் பொறித்துள்ளனர் - அது உண்மை, ஆனால் அவர்கள் கண்டதாக கூறிய கடவுள் மட்டும் பொய்யா?. பிற்காலத்தில் பலப்பல ஞானிகள், மகான்கள், சித்தர்கள் கனவில் இறைவன் வந்து கட்டளையிட்டதாக கூறி அதன்படி வாழ்ந்து காட்டினர். மகான்கள் வாழ்ந்தது உண்மை – ஆனால் அவர்கள் காட்டும் இறைவன் மட்டும் பொய்யா?

.......முடிவில்லாமல் இக்கட்டுரை முடிவடைகிறது......

.............OOOOOOOOOOO......